Golden Point Award 2023
Tamil Poetry – Honourable Mention
*காய்தலும் உலர்த்தலும்* by Thanigaivel Chithra தணிகைவேல் சித்ரா

## 1. <u>காய்தலும் உலர்த்தலும்</u>

வேலைமுடிந்து வந்ததும்

ஜன்னல் கம்பிகளில்

என்னைப் பிரித்துப் போட்டு

உலர்த்தினேன்

காற்றின் வேகத்திற்கு ஏற்ப

உலரும் என்னை

படுக்கையில் சாய்ந்தபடி

நிச்சலனமற்று பார்த்துக் கொண்டிருப்பது

நன்றாகத்தான் இருக்கிறது என்றாலும்

மடித்து வைக்க வேண்டிய

நேரம் வந்துவிட்டது

நாளைக்குத் தேவையான என்னை